ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2021.09.21 |

# இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்



2021 செத்தெம்பர் 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயச் சபையின் செயலாளராக உதவி ஆளுநர் ஜே பி ஆர் கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை இலங்கை மத்திய வங்கி மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது.

உதவி ஆளுநர் ஜே பி ஆர் கருணாரத்ன அவுஸ்ரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக முதுமானிப் பட்டத்தினையும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரயோகப் புள்ளிவிபரவியலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டத்தினையும் விஞ்ஞானமானி (பௌதீக விஞ்ஞானம்) பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CIMA) சக உறுப்பினரும் இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்களின் (CMA) இணை உறுப்பினருமாவார்.

இது தொடர்பில், நாணயச் சபையின் செயலாளரின் கடமைகளும் பொறுப்புகளும் கீழே குறிக்கப்பட்டவாறு காலமுறையான மாற்றத்திற்கும் காலத்திற்கு காலம் பணிச் சுழற்சிக்கும் உட்பட்டவை என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்:

- **2015 பெப்புருவரி**

  உதவி ஆளுநர் எச் ஏ கருணாரத்ன 6 மாதங்கள் இப்பதவியினை வகித்த உதவி ஆளுநர் சி ஜே பி சிறிவர்தனவின் இடத்திற்கு நியமிக்கப்பட்டார்.

- **2015 நவெம்பர்**

  நாணயச் சபையின் துணைச் செயலாளர் விசேட பதவி உருவாக்கப்பட்டு தரம் 4 அலுவலர் (திருமதி) கே எம் ஏ என் டவுலகல இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

- **2016 யூன்**

  16 மாதங்களாக இப்பதவியினை வகித்த உதவி ஆளுநர் எச் ஏ கருணாரத்னவின் இடத்திற்கு உதவி ஆளுநர் கே டி ரணசிங்க நியமிக்கப்பட்டார்.

- **2016 யூலை**

  ஒரு மாதத்திற்கு இப்பதிவியினை வகித்த உதவி ஆளுநர் கே டி ரணசிங்கவின் இடத்திற்கு உதவி ஆளுநர் எச் ஏ கருணாரத்ன நியமிக்கப்பட்டார்.

- **2018 நவெம்பர்**

  29 மாதங்களாக இப்பதவியினை வகித்த உதவி ஆளுநர் எச் ஏ கருணாரத்னவின் இடத்திற்கு உதவி ஆளுநரும் நாணயச் சபையின் துணைச் செயலாளருமான (திருமதி) கே எம் ஏ என் டவுலகல நியமிக்கப்பட்டார்: நாணயச் சபையின் துணைச் செயலாளர் பதவி நிரப்பப்படவில்லை.

- **2021 செத்தெம்பர்**

  34 மாதங்களாக நாணயச் சபையின் செயலாளராகவும் 36 மாதங்களாக நாணயச் சபையின் துணைச் செயலாளராகவும் பணியாற்றிய உதவி ஆளுநர் (திருமதி) கே எம் ஏ என் டவுலகலவின் இடத்திற்கு உதவி ஆளுநர் ஜே பி ஆர் கருணாரத்ன நியமிக்கப்பட்டார்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு மூத்த அலுவலர்கள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் அனைத்து அலுவலர்களுக்கும் குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புகளும் தொழிற்பாடுகளும் முகாமைத்துவத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியின் சிறந்த நலன்களுக்காக காலத்திற்குக் காலம் மாற்றத்திற்குட்பட்டவை எனவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிடவிரும்புகின்றது. மேலும், நிதியியல் நிறுவனமொன்றின் அலுவலர்களின் இடமாற்றங்களும் அலுவலர்களின் பணிச் சுழற்சியும் அத்தியாவசியமானது என்பதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டினதும் உள்ளகப் பரிசோதனையினதும் இன்றியமையாத கூறு என்பதும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.